1995 நவம்பர் 8]

வைப்பார்களானால், மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 60, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

60—

திருமேனி பூமிநாதசுவாமி திருக்கோவிலைச் சீர்படுத்துதல்

**38811–திருமதி வி.ஜி. மணிமேகலை:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி, திருமேனி பூமிநாதசுவாமி திருக்கோவிலைச் சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): காமராசர் மாவட்டம், திருச்சுழி வட்டம், திருச்சுழி அருள்மிகு திருமேனி பூமிநாதசுவாமி திருக்கோயிலின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால் இத்திருக்கோவிலின் திருப்பணி வேலைகளை உபயதாரர் மற்றும் பொதுமக்கள் நன்கொடை மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவம் கண்டு சமூக நீதி காப்போம் என்ற டாக்டர் அம்பேத்கார் அவர்களின் கூற்றுக்கிணங்க இன்றையதினம் வீரத்தோடும் விவேகத்தோடும் சிறப்பாக சமூக நீதியைக் காத்து செயலாற்றி வரும் எங்களுடைய இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்திலே கோவில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்ற வாக்குக்கிணங்க இன்றையதினம் பட்டித் தொட்டிகளில் எல்லாம் இருக்கக்கூடிய கோவில்கள் அனைத்திற்கும் திருப்பணி நடந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள திருச்சுழியில் பூமிநாதசுவாமி

[1995 நவம்பர் 8

திருக்கோவில் திருப்பணி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் திருப்பணி இப்போது புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கேள்வியை நான் போட்டபோது அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கவில்லை. இப்போது அந்தப் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-10

மாண்புமிகு இதயதெய்வம் அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தை, என் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, வினோபா காலத்திலிருந்து அந்தக் கோவிலில் இருக்கக் கூடிய ஒரு தேர் ஓடாமல் இருந்தது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அருப்புக்கோட்டை தொகுதிக்குச் சட்டமன்ற உறுப்பினராக முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே, அங்கு வந்தபோது அவர்கள் அந்தத் தேரை ஓடவைப்பேன் என்று கூறினார்கள். அவ்வாறே பலமுறை முயன்றார்கள். ஆனால் முடியவில்லை. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே, அந்தத் தேர், கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பாக ஓடியது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் நன்றியோடு சொல்லிக் கொள்கிறேன்.

அரசு எவ்வழியோ அவ்வழி மக்கள் என்பதற்கு இணங்க அருப்புக்கோட்டையில் இருக்கின்ற மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியாக, அந்தக் கோவிலிலே இருக்கின்ற அந்தத் தேர் நிறுத்துவதற்கு ஒரு ஷெட் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்களாகவே நிதியைப் போட்டு அந்தத் தேர் நிறுத்துவதற்கு ஷெட் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நன்றியோடு கூறிக் கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திருப்பணிக்கு பல டோனர்களை வைத்து அந்தப்பணி நடந்துகொண்டிருக்கிறது என்று கூறினார்கள். அந்தப் பணி எப்பொழுது முடியும் என்பதை நான் அறிய ஆவலோடு இருக்கிறேன். குறிப்பாக ஏன் இதைக் கேட்கிறேன் என்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நன்றாக அறிவீர்கள், காசிக்குச் செல்பவர்கள் அனைவருமே ராமேசுவரத்திற்குச் சென்றால்தான் அதற்கு ஒரு பலன் உண்டு என்று. அதற்கு இணங்க, அதே வரலாற்றிலே, திருச்சுழியிலே இருக்கக்கூடிய திருமேனி பூமிநாதசுவாமி திருக்கோவிலுக்குச் சென்றால்தான் அது முழுமை பெறும் என்றும் இருக்கிறது.

1995 நவம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இல்லை. நானும் அறிவேன். நேரிடையாகவே வந்து விடுவார்கள். சுற்றி வளைத்து பழையபடி திருச்சுழி போக மாட்டார்கள், காசி போய், இராமேஸ்வரம போய் அப்படியே திரும்பி விடுவார்கள்.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இது நடைமுறையில் இருக்கிறது. வரலாற்றிலே குறிப்பாக இருக்கிறது. ராமேசுவரத்திற்கு செல்பவர்கள் எல்லாம், தாங்கள் சென்றதற்கு முழுமை பெறவேண்டும் என்று அங்கு இருக்கக்கூடிய திருமேனி பூமிநாதசுவாமி கோவிலிலே சென்று வழிபட்டு வந்திருக்கின்றார்கள். சுந்தரமூர்த்தி நாயினார் பாடலிலே இடம் பெற்ற ஸ்தலம் அது. இந்த ஸ்தலப்பணி விரைவாக நடைபெற்று முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தனை காலம் ஆகும் என்பதை தெரிவிப்பார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோவில் ராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு திருக்கோவில். இந்தக் கோவிலுக்கு ராணி திருமதி இந்திராதேவி நாச்சியார் அவர்கள் பரம்பரை தர்மகர்த்தாவாக உள்ளார்கள். இந்தத் திருக்கோவிலுக்கு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னால் திருப்பணி செய்யப்பட்டது. இப்பொழுது இந்தக் கோவில் முழுவதும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதை நீக்க, உடனடியாக திருப்பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ஆணையை பிறப்பித்ததன் மூலம், (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு உபயதாரர்கள் மற்றும் பொதுமக்கள் நன்கொடை மூலம் திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, திருச்சுழியிலுள்ள சத்தியசாந்தி அறக்கட்டளைச் சார்பாக கோவில் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல், மற்ற திருப்பணி வேலைகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அது அரசின் பார்வைக்காக வரப்பெற்று இன்னும் ஆறு மாதகாலத்தில் அந்தத் திருப்பணிகளும் விரைவில், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கு இணங்க முடித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பவர்களுக்கு எல்லாம் கேட்டதைக் கொடுக்கும் வள்ளல் தன்மைப் பொருந்திய எங்களுடைய புரட்சித் தலைவி

[*1995 நவம்பர் 8*

அவர்கள் இன்றைக்கு இந்தக் கோவில் திருப்பணி ஆறு மாத காலத்திலே முடித்து கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாகக் கூறியிருக்கிறார்கள். அதற்காக அருப்புக்கோட்டை தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னால் எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்தாலும், இந்தக் கோவிலைப் பற்றிச் சிந்திக்கவில்லை. கோவில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்று நாம் பள்ளியிலே படிக்கும்போது படித்து இருக்கிறோம். அந்த வாக்கிற்கு முழு உருவம் கொடுக்கக்கூடிய வகையிலே எங்கள் தானைத் தலைவி, தங்கத் தலைவி இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அந்த மக்களுக்கு நற்பணி செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதை நன்றியோடு தெரிவித்து நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

49—

ஆரணியில் அடுக்குமாடி விடுகள் கட்டுதல்

*73281-டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதி, ஆரணியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி நகரில் 1.30 ஏக்கர் நிலத்தைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றித் தரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இந்நிலம் கிடைத்தவுடன் வீடுகள் கட்டும் பணி துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS